IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.453/2008
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 03.15 PM.

வா.சா. 1 சாட்சி மருதன் த.பெ. ஆண்டி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 16.10.2025 in accordance with the provisions of Act XX141.**

11ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. கருப்பன் சாம்பானியத்திற்கு முத்தன், ஆண்டி, ஆறுமுகம் ஆகிய மூவரும் மக்கள் என்றால் சரிதான். முத்தனுக்கு பஞ்சம்மாள், சின்னமருதன் ஆகிய இருவரும் வாரிசுகள் என்றால் சரிதான். சின்னமருதன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சின்னமருதன் என்பவரின் மனைவிதான் தனம் என்றாலும் அவர்களது குழந்தைகள்தான் ரவிகுமார், மகாலெட்சுமி என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்த அ.வ.எண்.453/2008 வழக்கில் பஞ்சம்மாளை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆண்டி என்பவருக்கு மருதன், பஞ்சம்மாள், கட்டிபிள்ளை, தர்மர், போதும்பொன்னு ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. பஞ்சம்மாள் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பஞ்சம்மாளின் கணவர் முருகன் என்றாலும் குழந்தைகள் பெயர் சக்திவேல், சகுந்தலா என்றால் சரிதான். தர்மர் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தர்மரின் மனைவி பெயர் ஒய்யம்மாள் என்றாலும்

அவர்களின் பிள்ளைகள் பெயர் செல்வம், பாண்டி, தர்மர் என்றாலும் சரிதான். ஆண்டியின் வாரிசுகளை அ.வ.எண்.453/2008 ல் சேர்க்கவில்லை என்றால் சரிதான். கருப்பன் சாம்பானின் மகனான ஆறுமுகம் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆறுமுகத்தின் மனைவி பெயர் ராக்கம்மாள் என்றால் சரிதான்.

3. ஆறுமுத்திற்கும் ராக்கம்மாளுக்கு பிறந்த மகள்தான் மருதன், முருகன், கருப்பையா, ஆறுமுகம், ஆதிலெட்சுமி, தங்கதாய், பரமேஸ்வரி ஆகியோர்கள் என்றால் சரிதான். ஆதிலெட்சுமி இறந்துவிட்டார் என்றால் தெரியாது. ஆதிலெட்சுமி இறந்துவிட்டார் என்பது எனக்கு தெரியும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆறுமுகன் மகன் மருதன் அவருடைய குடும்ப சொத்தை பிரிக்க சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4. முத்தன் என்ற மூக்கன் மகன் மருதன் என்பவர் தாக்கல் செய்த அ.வ.எண்.489/2008 ல் எனது மனைவி சிட்டம்மாள் ஒரு தரப்பினர் என்றால் எனக்கு தெரியாது. நான் யாரிடம் இருந்து வழக்கு சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் முத்தன், ஆண்டி, ஆறுமுகம் ஆகியோர்களிடம் கிரையம் வாங்கினேன். எப்போது வாங்கினேன் என்றால் நினைவில் இல்லை. எனது வழக்கு சொத்தை பொறுத்து கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி கிரைய ஆவணத்தை பார்த்தார் எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்பது தெரியவரும் என்றால் சரிதான்.

5. முத்தன், ஆண்டி, ஆறுமுகம் ஆகியோர்கள் எந்த வருடம் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. முத்தன்,

ஆண்டி, ஆறுமுகம் ஆகியோர்கள் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முத்தன், ஆண்டி, ஆறுமுகம் ஆகியோர்கள் பாகம் பிரிக்கவில்லை என்பதால் அவர்களது வாரிசுகள் தற்போது பாகம் பரிக்கவேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

6. மேற்படி நபர்கள் எனக்கு கிரையம் கொடுக்கவில்லை என்றாலும் கிரையம் நான் பெற்றதாக பொய்யாக பிரஸ்தாபம் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. தற்போது வரை முத்தன், ஆண்டி, ஆறுமுகம் ஆகியோர்கள் பெயரில் கூட்டு பட்டாவாகத்தான் இருந்துவருகிறது என்றால் சரியல்ல. முத்தன், ஆண்டி, ஆறுமுகம் ஆகியோர்கள் பெயரில்தான் கூட்டுப்பட்டா இருக்கிறது வழக்கிற்காக எனது பெயருக்கு தனிப்பட்டா பெற்றுள்ளேன் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. அ.வ.எண்.453/2008ல் உரிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்றதாக சொல்லும் கிரைய பத்திரத்தில் உரிய தரப்பினர்களை கட்டுப்படுத்தி கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரம் 8 முதல் 11 வரையிலான பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ஆண்டிக்கு கிடைக்ககூடிய பங்கில் அவரது வாரிசான தர்மருக்கு வருகின்ற பங்கில் அவரது வாரிசுகளான 8 முதல் 11 வரையிலானவர்களுக்கு பங்குரிமை இருக்கிறது என்றால் சரியல்ல.

8. ஆண்டிக்கு இருக்ககூடிய பங்கில் அவரது மக்களுக்கு உரிமை உள்ளது என்றால் அவர் விற்றுவிட்டதால் உரிமை இல்லை. அவர்

விற்கவில்லை வழக்கிற்காக விற்றுவிட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையான உரிமையாளருக்கு எதிராக அ.வ.எண்.453/2008 ல் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

9. முத்தன் மகன் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.489/2008 ல் 8 முதல் 11 வரையிலான பிரதிவாதிகளுக்கு 3 ல் 1 பாகம் கிடைக்கூடியது என்றால் சரியல்ல. அவர்களது பாகத்தை அவர்களே வைத்துக்கொண்டார்கள். மேற்படி அவரவர் பாகத்தை அவர்களே வைத்துக்கொண்டார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அ.வ.எண்.453/2008 தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. 8 முதல் 11 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்கோரிக்கை அனுமதிக்கப்படவேண்டியவை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அ.வ.எண்.453/2008 வழக்கில் 8 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்பதால் எனது பிராது பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு விபரம் பற்றியும் வழக்கு சொத்து பற்றியும் தெரியாமல் சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

10. நான் தாக்கல் செய்யதுள்ள நிரூபண வாக்குமூலத்தில் எனது வழக்கறிஞர் கையெழுத்து செய்யசொன்னதால் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.வ.எண்.453/2008 ல் பிராதில் எனது வழக்கறிஞர் கையெழுத்து செய்யசொன்னதால் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன விபரம்

எழுதியுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதில் என்ன பரிகாரம் கேட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.453/2008 தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. அ.வ.எண்.453/2008 ல் 1 முதல் 13 ஆவணங்கள் எதுவும் எனக்கு உரிமைகொடுக்காது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் எதுவும் 8 முதல் 11 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி 13 ஆவணங்களும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 03.50 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.16 10:10:53 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.